உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தினதமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.05.2026 • மலர் 04 • இதழ்: 141 • Edition : Nagercoil • 21.05.2026 • Vol : 04 • Issue : 141 • Page : 4 • Rs. 5/-

இந்தியா - இத்தாலி உறவு மேலும் ஆழப்படுத்தப்படும்

பிரதமர் மோடி, மெலோனி உறுதி

ரோம், மே. 21

முக்கிய துறைகளில் இந்தியா இத்தாலி உறவு மேலும் ஆழப்படுத்தப்படும் என்றும், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு சிறப்பு மூலோபாய கூட்டாண்மை நிலைக்கு உயர்த்தப்படும் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியும் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டின் பிரதமர் ஜார்ஜியா மெலோனியை சந்தித்து இன்று பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிலையில், இரு தலைவர்களும் இணைந்து எழுதிய ஊடகக் குறிப்பு தற்போது வெளியாகி இருக்கிறது.

அதில் அவர்கள் கூறி இருப்பதாவது: சமீபத்திய ஆண்டுகளில் இந்தியா இத்தாலி உறவு முன்னெப்போதும் இல்லாத வேகத்துடன் விரிவடைந்து தற்போது ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு, ஒரு சுமூகமான நட்பிலிருந்துசுதந்திரம், ஜனநாயகம், எதிர்காலத்துக்கான ஒரு பகிரப்பட்ட பார்வை ஆகிய விழுமியங்களில் வேரூன்றிய ஒரு சிறப்பு மூலோபாயக் கூட்டாண்மையாக உருவெடுத்துள்ளது.

உலக ஒழுங்கு ஆழமான மாற்றங்களுக்கு உள்ளாகி வரும் இந்த காலக்கட்டத்தில், இந்தியா இத்தாலி கூட்டாண்மை மிக உயர்ந்த அரசியல் மட்டங்களில் நடைபெறும் பரிமாற்றங்களால் வழிநடத்தப்படுகிறது. இரு நாடுகளின் பொருளாதார ஆற்றல், பல நூற்றாண்டுகள் பழமையான நாகரீக ஞானம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் இந்த கூட்டாண்மை ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்று வருகிறது. 21ம் நூற்றாண்டில் செழிப்பும் பாதுகாப்பும் நாடுகளின், புதுமைகளைப் புகுத்தும் திறன், எரிசக்தி மாற்றங்களை நிர்வகிக்கும்திறன், மூலோபாய இறையாண்மையை வலுப்படுத்தும் திறன் ஆகியவற்றை பொறுத்தே அமையும்.

புதிய இலக்குகளை பின்பற்றுவதன் மூலமும், ஒன்றுக்கொன்று ஆதரவாக இருப்பதன் மூலமும் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவறத்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். இத்தாலியின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் திறனுக்கும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, பொறியியல் திறமை, அளவு, புத்தாக்கச் சூழலமைப்பு, தொழில் முனைவோர் பலம் ஆகியவற்றுக்கும் இடையே வலுவான ஒருங்கிணைப்பை உருவாக்க இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

இந்த கூட்டாண்மை என்பது வெறும் பலங்களின் ஒருங்கிணைப்பு மட்டுமல்ல, இரு நாடுகளின் தொழில்துறைத் திறன்கள் ஒன்றையொன்று பூர்த்தி செய்து வலுப்படுத்தும் ஒரு கூட்டு மதிப்பு உருவாக்கமாகும். இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே முன்மொழியப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளிடையே அதிக வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பரிமாற்றங்களுக்கு வழிவகுக்கும்.

பாதுகாப்பு, விண்வெளி, தூய்மையான தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், வாகன உதிரி பாகங்கள், ரசாயணங்கள், மருந்துகள், ஜவுளி, வேளாண் உணவுப் பொருட்கள், சுற்றுலா போன்ற துறைகளில் கவனம் செலுத்தி 2029ம் ஆண்டுக்குள் 20 பில்லியன் யூரோக்கள் (ரூ.2.25 லட்சம் கோடி) இருதரப்பு வர்த்தக இலக்கை அடைவதிலும் அதைத் தாண்டுவதிலும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இவ்வாறு இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் பறிக்கும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை கோரி வழக்கு

சென்னை, மே. 21

தமிழகம் முழுவதும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் பறிக்கும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பான புகாரை கூட்டுறவுத்துறை மற்றும் லஞ்ச ஒழிப் புத்துறை இருவாரங்களில் பரிசீலிக்க உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஏ. வெங்கடேசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய் திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

தமிழகம் முழுவதும் உள்ள மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள் முதல் நிலையங்களில் தற்போது டோக்கன் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இதனால், நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்கள் தலையிட்டு விவசாயிகளிடம் லஞ்சம் பெறும் நிலை உள்ளது. நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்க வேண்டிய அதிகாரிகளும் அவர்களுடன் கூட்டணி அமைத்து செயல்படுவதால், சொந்தமாக நெல்லை விளைவிக்கும் விவசாயிகள் அதைஅரசிடம்கொண்டு சேர்ப்பதற்குள் இடைத்தரகர்களிடம் சிக்கி மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லஞ்சம் பெறும் இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கும், லஞ்ச ஒழிப்புத்துறைக்கும் உத்தரவிட வேண்டும்.

அத்துடன் நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நேரடியாகவே பதிவு செய்து டோக்கன் பெறும் நடவடிக்கையை உருவாக்க உத்தரவிட வேண்டும். இடைத்தரகர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி போதிய எண்ணிக்கையில் போலீஸ் பாதுகாப்பும் வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் அவர் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எல்.விக்டோரியாகவுரி முன் பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், இதுதொடர்பாக கடந்த ஆண்டு செப்டம்பரில் அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வாதிடப்பட்டது. காவல் துறை தரப்பில். தங்களுக்கு இதுதொடர்பாக எந்த புகாரும் வரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அதை யடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புதிதாக மனு அளிக்க மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, மனுதாரர் தரப்பு கோரிக்கையின் தீவிரத்தை கருத்தில்கொண்டு இதுதொடர்பாக இருவாரங்களில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டுறவுத்துறை செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், லஞ்ச ஒழிப்புத்துறை ஆகியோருக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளார்.

“நம்மை பலப்படுத்தி கொண்டால் திமுக வெற்றி சாத்தியமாகும்”: கனிமொழி எம்.பி. விளக்கம்

தூத்துக்குடி, மே. 21

நம்மை பலப்படுத்திக் கொண்டால் யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும் என கட்சி நிர்வாகிகளிடம் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. சட்டப்பேரவை உறுப்பினர்கள் மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்), கருணாநிதி (கோவில்பட்டி), தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் பி.கீதாஜீவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கனிமொழி பேசியதாவது: நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் நாம் எதிர்பாராத வகையில் தோல்வியைதழுவியுள்ளோம். அதுகுறித்து ஆய்வு செய்ய, தலைவர் ஸ்டாலின் குழு அமைத்துள்ளார். அந்த குழு வினரிடம் கட்சி நிர்வாகிகள் உண்மை நிலவரங்களை தயக்கமின்றி கூற வேண்டும். அது நமது கட்சியை மறுகட்டமைப்பு செய்ய உதவியாக இருக்கும். மேலும், கூட்டணி பற்றி சிந்திக்க வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். நம்மை நாம் பலப்படுத்திக் கொண்டால், யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும். இவ்வாறு பேசினார்.

வாக்களித்தவாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பது, ஜூன் 3 கருணாநிதி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கோடம்பாக்கத்தில் டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி மக்கள் போராட்டம்

கடை மாற்றப்படும் என பேரவைத் தலைவர் உறுதி

சென்னை, மே.21

கோடம்பாக் கத்தில் டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி மக்கள் போராட்டம் நடத்தியதையடுத்து, 7 நாட்களில் கடை மாற்றப்படும் என, சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் உறுதியளித்தார்.

சென்னை, கோடம்பாக் கம், டிரஸ்ட்புரம் பகுதியில் புளியூர் பிரதான சாலையில் டாஸ்மாக் கடை எண்.405 அமைந்துள்ளது. இந்த பகுதியில் அதிகளவில் வீடுகள் இருப்பதால், அதிகப்படியான மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது.

மேலும், இந்த சாலையில் பள்ளிக்கூடமும், ஆரம்ப சுகாதாரநிலையமும் இருப்பதாகவும், டாஸ்மாக் கடை காரணமாக பள்ளி மாணவர்கள், நோயாளிகள் அவதிப்படுவதாக குற்றம்சாட்டி அப்பகுதி மக்கள் நேற்று டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து, தகவலறிந்த ஆயிரம் விளக்கு தொகுதி எம்எல்ஏவும், சட்டப்பேரவை தலைவருமான ஜே.சி.டி.பிரபாகர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சமாதானப் படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு உறுதி அளித்தார். இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதுகுறித்து, பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த கடை பள்ளிக் கூடத்துக்கு அருகிலும், மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதியில் இடையூறாக இருப்பதாக கூறி பல ஆண்டுகளாக இதை அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

ஆனால், முந்தைய அரசுகள் இதை கண்டுகொள்ளாமல் இருந்துள்ளனர். முதல்வர்நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்ற காரணத்தால் மக்கள் நேரடியாக போராட்டத்துக்கு வந்து விட்டனர்.

இந்த விவகாரம் தொடர்பாக, மக்கள் என்னிடம் மனு கொடுத்திருந்தால், நடவடிக்கை எடுத்திருப்பேன். இந்த விவகாரம் குறித்து டாஸ்மாக் உயரதிகாரிகளிடம் பேசியுள்ளேன். இன்னும் 7 நாட்களில் இந்த கடை மாற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

“தோல்விதான் சிறந்த பாடங்களை கற்று தருகிறது” பிடிஆர் பழனிவேல் தியாகராஜன்

மதுரை, மே. 21

மதுரை அண்ணா நகர் பகுதியில் மாநகர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு அவைத்தலைவர் ஒச்சுபாலு தலைமை வகித்தார்.

மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி முன்னிலை வகித்தார். முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கட்சியினருக்கு சிறப்பு ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது: முன்னாள் பிரதமர்ராஜீவ்காந்தி இறந்தவுடன்தேர்தல்அலை வந்தது. பின்னர் 2011ல் ஒரு தேர்தல் அலை வந்தது. அதேபோன்று தற்போது, கண்ணுக்குத் தெரியாத அலை வந்துள்ளது.

நாம் தவெகவை சரியாக கணிக்காததால், சாதாரணமாக எண்ணி விட்டோம். கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருந்தால்கூட 40 சதவீதம்வாக்குவாங்குவோம்.ஆனால்,தற்போதைய தேர்தலில் நமது வாக்கு சதவீதம் மிகவும் குறைந்துள்ளது.

எனவே, இனி வருங்காலங்களில் நாம் ஒருவரை ஒருவர் குறை கூறாமல், நம்மை நாமே சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். வெற்றியைவிடத் தோல்விதான் சிறந்த பாடங்களையும் அனுபவங்களையும் கற்றுத் தருகிறது.

மது இயக்கம் நிரந்தரமானது, நமது தத்துவம் கொள்கை நிரந்தரமானது, ஆனால் செயல்முறைகளை நாம் மாற்றத்துக்கு உட்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இது ஆட்சி மற்றும் கட்சி நிர்வாகம் இரண்டுக்கும் பொருந்தும்.

எனவே, விருப்பு வெறுப்பு இல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க வேண்டும். திமுக களஆய்வுக் குழுவினரிடம் உங்கள் குறைகளை கூறலாம். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், வேலுச்சாமி, முன்னாள் மேயர் குழந்தைவேலு உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். மதுரை மாநகர் மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாவட்டச் செயலாளர் கோ.தளபதி உள்ளிட்டோர்.

தினதமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சிறப்பாக செயல்படுவேன்

பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்த எம்.எல்.ஏ மார்க்கண்டயேன்

விளாத்திகுளம் மே 21.

கடந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விளாத்திகுளம் சட்டமன்றத்தொகுதி திமுக வேட்பாளராக போட்டி யிட்டு மூன்றாவது முறையாக வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுள்ள எம்.எல்.ஏ மார்க்கண்டயேன், தனக்கு சட்டமன்ற உறுப்பினர் வாய்ப்பளித்த பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்தார். அப்போதுவிளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு பேசிய எம்.எல்.ஏ மார்க்கண்டேயன், நான் ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்ததை விட தற்போது எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக மக்களின் அனைத்து குறைகளையும் முன்னெடுத்து சிறப்பாக பணியாற்றுவேன் என்றார்,

அதனைத் தொடர்ந்து பேசுகையில் காங்கிரஸ் ஒரு பச்சைதுரோகி, திமுக கூட்டணியில் வெற்றி பெற்று திமுக முதுகில் குத்தி விட்டனர்,

இதோடு காங்கிரஸ் மூன்றாவது முறையாக திமுகவின் முதுகில் குத்தி விட்டது, அதேபோல் ஒரு அரசியல் அனுபவம் இல்லாத சினிமா வாழ்க்கையை மட்டும் நம்பி மக்கள்வாக்களித்துதற்போது ஒரு முதல்வரை தேர்ந்தெடுத்துள்ளது வேடிக்கையாக உள்ளது, மக்கள் சேவை செய்யாமல் சினிமாவை மட்டுமே நம்பி அரசியலுக்கு வந்தவர்களுக்கு பதிலாக, மக்கள் பிரச்சனையும், அரசியல் கட்டமைப்பும், அனைத்து உயிர்களுக்கான அரசியலை பேசும் நாம் தமிழர் கட்சி சீமானுக்கு வாக்களித்தால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருப்பேன் என்று எம்.எல்.ஏ மார்க்கண்டயேன் தொடர்ந்து பேசினார்.

இந்நிகழ்வில் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, ,விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான ஏரோபிக்ஸ் போட்டியில் தமிழக வீரர்கள் முதலிடம்

76 பதக்கங்கள் பெற்று சாதனை

ஈரோடு மே 21

கர்நாடக மாநிலம் மைசூரில் தேசிய அளவிலான ஏரோபிக்ஸ் மற்றும் ஷிப் ஷாப் போட்டிகள் 4 நாட்கள் நடைபெற்றது .

இதில் இந்திய அளவில் 15 மாநிலங்கள் பங்கு பெற்றன .. அதில் தமிழ்நாடு ஏரோபிக்ஸ் மற்றும் ஹிப்பாப் அசோசியேஷன் சார்பில் தலைவர், செயலர் ஜீவா சுரேஷ்,லதா சுரேஷ் தலைமையில் ரோபி,சத்தி,கருர், மற்றும் கோவையை சார்ந்த 104 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு பிரிவுகளின் கீழ் நடந்த இந்த போட்டிகளில் தமிகத்தை சார்ந்த வீரர்கள் 37 தங்கம் 21 வெள்ளி 18 வெண்கலம் என 76 பதக்கங்கள் வென்று பதக்க பட்டியலில் முதலிடம் பிடித்தனர் இதன் மூலமாக கலந்து கொண்ட மற்ற மாநிலங்களை பின்னுக்கு தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்து சாதனை படைத்தது.

பதக்கங்களை குவித்த ஏரோபிக்ஸ் வீரர் வீராங்கனைகளை அணி கேப்டன்கள் மற்ற மாநிலங்களை சேர்ந்த வீரர் வீராங்கனைகள் மற்றும் போட்டி நடத்தியவர்கள் பெரிதும் பாராட்டினர்.

தருமபுரியில்

இடதுசாரி கட்சிகளின் சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

தருமபுரி மே 21

தருமபுரி மாவட்ட CPI, CPI(M), CPM(ML) L ஆகிய இடதுசாரி கட்சிகளின் சார்பில் தருமபுரி தொலை பேசி நிலையம் அருகில் பெட்ரோல், டீசல் விலை உயர்வை உயர்த்திய மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மாவட்ட செயலாளர் கலைச்செல்வன், சிசுபாலன், குமார், விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பெட்ரோல், டீசல் விலை உயர்வை உயர்த்திய மத்திய அரசை கண்டித்து திரும்பப் பெறு திரும்ப பெறு, பெட்ரோல் டீசல் விலை உயர்வை திரும்பப் பெறு திரும்பப் பெறு, உயர்த்தாதே உயர்த்தாதே, பெட்ரோல் டீசல் விலையை உயர்த்தாதே உயர்த்தாதே ஆகிய கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர், இந்த ஆர்ப்பாட்டத்தில் இடது சாரி கட்சிகளின் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பழவேற்காடு கடலில்

மீன்பிடி வலையில் 2ம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட பீரங்கி குண்டு சிக்கியது

பொன்னேரி, மே. 21

பழவேற்காடு பகுதி கடலில் மீன்பிடி வலையில் சிக்கிய 2ம் உலகப் போரில் பயன் படுத்தப் பட்ட பீரங்கி குண்டால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பொன் னேரி அருகே உள்ள பழவேற்காடு, அதையொட்டி உள்ள 30 க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், நேற்று முன்தினம் இரவு, பழவேற்காட்டை அடுத்த பசியா வரம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த தேவபிரகாஷ் (35), 4 பேருடன் பழவேற்காடு பகுதியில், வங்காள விரிகுடா கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப் போது மீன் பிடி வலையில், துருப்பிடித்த நிலையில் ஒரு அடி உயரம் மற்றும் 10 கிலோ எடை உள்ள இரும்பாலான உருளை போன்ற மர்மப் பொருள் சிக்கியது.

அதிர்ச் சியடைந்த தேவபிரகாஷ், திருப்பாலை வனம் போலீஸாருக்கு தகவல் அளித்துவிட்டு, மர்மப் பொருளுடன் பழவேற்காடு, கடற்கரைக்கு திரும்பினார். அங்கு விரைந்த போலீஸார், மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப் பொருளை மீட்டனர்.

ஆவடி, வெடிகுண்டு நிபுணர்களின் சோதனையில், மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப் பொருள், 2ம் உலகப் போரில் பயன்படுத்தப் பட்ட பீரங்கி குண்டு என்பது தெரிய வந்தது.

இதையடுத்து, போலீஸார், திருப்பாலை வனம் பகுதியில் திறந்தவெளியில் பள்ளம் தோண்டி, பாதுகாப்பான முறையில் பீரங்கி குண்டை புதைத்து வைத்துள்ளனர்.

மேலும், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீஸார், பீரங்கி குண்டு குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்து, பிறகு நீதிமன்ற அனுமதியுடன் பீரங்கி குண்டை செயலிழக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

திருச்சி: காவிரி ஆற்றங்கரை ஓரம் அடையாளம் தெரியாத ஆண் சடலம்

திருச்சி, மே. 21

திருச்சி ஜீயபுரம் காவல் நிலையஎல்லைக்குட்பட்ட பாலூர் காவிரி ஆற்றங்கரையில் 45வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் சுதா அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், உயிரிழந்த நபரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். உயிரிழந்தவர் யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருச்சி: பாம்பு கடித்து சிறுவன் பலி

திருச்சி, மே. 21

மணப்பாறையை அடுத்த பண்ணப்பட்டி அருகே உள்ள ஊத்துப்பட்டியைச் சேர்ந்த ரவிக்குமார் என்பவரின் 7 வயது மகன் அபினேஷ், வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது பாம்பு கடித்துள்ளது. குடும்பத்தினர் அவனை மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு முதலுதவிக்குப் பிறகு திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட நிலையில், வழியிலேயே அபினேஷ் உயிரிழந்தான். புத்தாநத்தம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

போலி கடவுச்சீட்டில் திருச்சி வந்தவர் கைது

திருச்சி, மே. 21

சனிக்கிழமை அதிகாலை மலேசியாவிலிருந்து ஏர் ஏசியா விமானம் மூலம் திருச்சி வந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வீ. முத்துச்சாமி (60) என்பவர், விமான நிலைய குடியேற்றப் பிரிவு அதிகாரிகளின் சோதனையின்போது போலி கடவுச்சீட்டு மூலம் வந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, குடியேற்றப் பிரிவு அதிகாரி பீயூலா ஞானவசந்தி அளித்த புகாரின்பேரில், திருச்சி விமான நிலையக்காவல்நிலையபோலீஸார்வழக்குப்பதிந்து முத்துச்சாமியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைபதியில் வைகாசி திருவிழா

நாளை தொடங்குகிறது

தென்தாமரைகுளம்., மே.. 21

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைபதியில் வைகாசி திருவிழா நாளை (வெள்ளிக்கிழமை) கொடியேற்றத்து

டன் தொடங்குகிறது.

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைபதியில் ஆண்டுதோறும் ஆவணி, தை, வைகாசி ஆகிய மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறும் அதன் படி இந்த ஆண்டுக்கான தை திருவிழா நாளை 22ம் தேதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.பணிவிடையை குருமார்கள் பையன்ஸ்ரீராம், பையன் சிவராஜ், பையன் பொன்ராஜ்,ஸ்ரீராம பையன் ஆகியோர் செய்கின்றனர்.விழா வருகிற ஜூன் 1ம் தேதி வரை 11நாட்கள் நடைபெறுகிறது.

இதையொட்டி நாளை வெள்ளிகிழமை அதிகாலை 05.30 மணி அளவில் கொடி ஏற்றுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றது. நிகழ்ச்சிக்கு குரு பையன் காமராஜ் தலைமை தாங்குகிறார். குருமார்கள் பால் பையன்,பையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். குரு பையன் ராஜா கொடியேற்றி வைக்கிறார். பின்னர், பணிவிடையும், தர்மங்களும், வாகன பவனியும் நடைபெறுகிறது. மதியம் 12 மணிக்கு அன்னதர்மம் நடைபெறுகிறது. மாலையில் பணிவிடையும் இரவு அய்யா தொட்டில் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வருதல் நிகழ்ச்சியும் நடக்கிறது.

23ம் தேதி மாலையில் அய்யா மயில் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம்வரும்நிகழ்ச்சியும், 24ம் தேதி இரவு அய்யா அன்ன வாகனத்தில் வெள்ளை சாத்தி வீதி வலம் வரும் நிகழ்ச்சியும், 25ம் தேதி மாலையில் அய்யா பூஞ்சப்பரத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சியும் நடக்கிறது. 26ம் தேதி அய்யா பச்சைசாற்றி சப்பர வாகனத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சியும் 27ம் தேதி அய்யா சர்ப்ப வாகனத்திலும் 28ம் தேதி அய்யா கருட வாகனத்திலும் எழுந்தருளும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

8ம் நாள் விழாவான 29ம் தேதி அய்யா குதிரை வாகனத்தில் எழுந்தருளி சாமிதோப்பு. முத்திரி கிணறு சமீபம் கலி வேட்டையாடுதல் நிகழ்வு நடக்கிறது. அதன் பிறகு அய்யா குதிரை வாகனத்தில் செட்டிவிளை, சாஸ்தான்கோவில்விளை, சோட்டப்பணிக்கன் தேரிவிளை, காமராஜபுரம்வழியாகசாமிதோப்பு வந்தடைகிறார்.

30ம் தேதி அய்யா அனுமார் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் 31ம் தேதி இரவு 12 மணி அளவில் அய்யா இந்திர விமானம் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

திருவிழாவின் 11ம் நாளான ஜூன் 1ம் தேதி பகல் 12 மணிக்கு அய்யா பல்லாக்கில் பஞ்சவர்ண தேருக்கு எழுந்தருளி தேரோட்டம் நடக்கிறது விழா ஏற்பாடுகளை தலைமைபதி நிர்வாகிகள் செய்து வருகின்றனர்..

தருமபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாநில மாவட்ட அளவில் சாதனை

தருமபுரி மே 21

தருமபுரி நகரில் உள்ள செந்தில் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் 2025- 2026 ம் ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தொடர்ந்து ஐந்தாவது வருடமாக மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். இந்த பள்ளியின் மாணவிகள் ஸ்ரீ நிதவர்ணா , கோபிகா ஸ்ரீ ஆகியோர் 498 மதிப் பெண்கள்பெற்று மாநில அளவில் இரண்டாம் இடமும், மாவட்ட அளவில் முதல் இடமும் , பள்ளி அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இதே போன்று மாணவிகள் லஷ்மிதா, சுமையா ஆகியோர் 497 மதிப் பெண்கள் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் இடமும், பள்ளியளவில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளனர். மேகவர்ஷினி, நிகில் பிரசாத் 496 மதிப் பெண்கள் பெற்று பள்ளி அளவில் மூன்றாம் இடம் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். 490 மதிப்பெண்களுக்கு மேல் 22 மாணவர்களும், 480 மதிப்பெண்களுக்கு மேல் 57 மாணவர்களும், 470 மதிப்பெண்களுக்கு மேல் 96 மாணவர்களும், 460 மதிப்பெண்களுக்கு மேல் 124 மாணவர்களும் பெற்றுள்ளனர். கணிதம் 10 மாணவர்களும், அறிவியல் 43 மாணவர்களும், சமூக அறிவியல் 21 மாணவர்களும் 100% மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். சாதனை படைத்த மாணவ , மாணவிகளை செந்தில் பள்ளி நிறுவனங்களின் தலைவர் செந்தில்சி.கந்தசாமிசால்வை அணிவித்து பூக்கொத்து வழங்கி பாராட்டினார். செந்தில் குழுமத் துணைத் தலைவர் மணி மேகலை, செந்தில் கல்வி குழுமங்களின் செயலாளர் தனசேகர், நிர்வாக அலுவலர் ரபீக் அகமத், முதல்வர் வள்ளியம்மாள்,

மேலாளர் சாந்தி, முதல்வர் (நிர்வாகம்) ஓங்காளி ,மேல்நிலை பிரிவு முதல்வர் திருநாவுக்கரசன், இடைநிலை பிரிவு பொறுப்பாசிரியர் சசி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

தேசிய பேட்மின்டன் போட்டி

குமரி பெண் தலைமை காவலருக்கு பதக்கம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வாழ்த்து

நாகர்கோவில், மே.21

அகில இந்திய காவல்துறையின் தேசிய பேட்மிண்டன் தொடர்2026. போட்டிகள் மே 9 முதல் மே 13 வரை, உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள பிபிடி பேட்மிண்டன் அகாதமியில் வைத்து நடைபெற்றது.

இந்த பேட்மிண்டன் விளையாட்டுப் போட்டியில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து, ஆயுதப்படை பெண் தலைமை காவலர் ஜீவா என்பவர் 35 வயதிற்கு மேற்பட்டோருக்கான பேட்மிண்டன் போட்டி பிரிவில் கலந்துகொண்டு மூன்றாம் பரிசினை பெற்றுள்ளார். தேசிய அளவில் குமரி மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த பெண் தலைமை காவலர் ஜீவாவைமாவட்டகாவல் கண்காணிப்பாளர் இரா. ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

குமரி ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில்

10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 % வெற்றி; கலெக்டர் தகவல்

நாகர்கோவில், மே.21

தமிழ்நாடு முழுவதும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவ மாணவியர்களுக்கான10ம்வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று (20.05.2026) தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டது. இதில் கன்னியாகுமரி மாவட்டம் மாநில அளவில் 5இடத்தினை எட்டியுள்ளது. இதற்கான பாராட்டு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, தலைமையில் கலெக்டர் அலுவலக குறள் கூட்ட ரங்கில் நடைபெற்றது. தொடர்ந்து கலெக்டர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு படித்த 10,615 மாணவர்களும், 10,733 மாணவிகளும் என மொத்தம் 21,348 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். அதில் 10,214 மாணவர்களும், 10,557 மாணவியர்களும் என மொத்தம் 20,771 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அளவில் 97.30 சதவீதம் பெற்று 5 வது இடம் பெற்றுள்ளது.

மேலும் அரசு பள்ளிகளில் 3100 மாணவர்களும், 3039 மாணவிகளும் என மொத்தம் 6139 மாணவ மாணவியர்கள் எழுதியுள்ளார்கள். அதில் 2921 மாணவர்களும், 2955 மாணவிகளும் என மொத்தம் 5876 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று 95.71 சதவீதம் பெற்று தமிழ்நாடு அரசுப் பள்ளிகள் அளவில் நமது மாவட்டம் 7 வது இடம் பெற்றுள்ளது.

இவற்றில் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்கள் பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். பழங்குடியினர் நலத்துறையின் கீழுள்ள பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்கள் 98.5 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளர்.

தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக சிறப்பாக பணியாற்றிய மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கல்வி, தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மாணவ மாணவியர்களுக்கு உறுத்துணையாக இருந்து ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் என பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். என கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ஜெயராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஜெயராஜ் (நாகர்கோவில்), சௌந்தர ராஜா (மார்த்தாண்டம்), அஜிதா (தனியார் பள்ளிகள்) உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

நாகர்கோவிலில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கல்வி உதவி வழங்கும் விழா

சுசீந்திரம்,மே.21

நாகர்கோவில் கோட்டார் செட்டித்தெருவில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் வைத்து ஏவுகணை நாயகன் அறக்கட்டளையின் 6ம் ஆண்டு தொடக்க விழா,கல்வி உதவி வழங்கும் "கல்விக்கு உயிர் கொடு"விழா மற்றும் சிறந்த சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு அறக்கட்டளையின் நிறுவனர் அபிலாஷன் வரவேற்புரை வழங்கினார். சிறப்புவிருந்தினர்களாக டாக்டர். பி ஜி வின் ராஜ்,சிவராம் மனோகரன், பிரதீஷ், கோகுல்,மகேஷ், சதீசன் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர்.

இதில் ஆசிரியர் பிரியதர்ஷினி மாணவ,மாணவியருக்கு கல்வி முக்கியத்துவத்தை பற்றியும்,கல்வி சேவை பற்றியும் ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வில் தாய் அல்லது தந்தையை இழந்த சுமார் 350 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குமரியில்

குடிநீர் திட்டப்பணிகள்: ஆட்சியர் ஆய்வு

நாகர்கோவில், மே.21

கன்னியாகுமரி மாவட்டத்தில் 79 கடலோர குடியிருப்புகள், 19 வழியோர ஊரக குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகளுக்கான கூட்டு குடிநீர் திட்ட புனரமைப்பு பணிக்காக 5500 மீட்டர் நீளத்திற்கு 400மி.மீ விட்டமுள்ள ஒபிவிசி குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட மாங்குழி சாலையில் நடைபெற்று வரும் பணிகளை மாவட்டஆட்சியர்அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் நடைபெற்று வரும் பணிகளை 30.05.2026க்குள் விரைந்து முடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறித்தினார்.

தொடர்ந்து கல்குளம் வட்டத்திற்குட்பட்ட திக்கணங்கோடு முதல் திங்கள்சந்தை வரை (பரசேரி –புதுக்கடைசாலை) 4400 நீளத்திற்கு 500 மி.மீ விட்டமுள்ள டிஐ குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதை ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் கன்னியாகுமரி – சுசீந்திரம் கூட்டு குடிநீர் திட்டத்திற்காக வழுக்கம்பாறைபகுதியில்நான்கு வழி சாலை அருகே நெடுஞ்சாலைத் துறையால் 150 மி.மீ விட்டமுள்ள டிஐ குழாய்கள் பதிக்கும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை23.05.2026க்குள் போக்குவரத்திற்கு இடையூறின்றி விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற ஆய்வில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் ராஜன், உதவி நிர்வாகப் பொறியாளர் ராஜேஷ்குமார், உதவிப் பொறியாளர் முருகன் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

கழிவுநீர் ஓடை அடைப்பால் சாலையில் ஓடிய மழை நீர்

தூர்வாரி நடவடிக்கை எடுத்த (பொ) மேயர்

நாகர்கோவில் மே 21

குமரி மாவட்டம் நாகர்கோவில் மறவன்குடியிருப்பு 44 வது வார்டுக்கு உட்பட்ட பேருந்து நிறுத்தம் அருகே செல்லும் மழைநீர் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டதால் மழை நீர் செல்லமுடியாமல் சாலையில் கரை புரண்டு ஓடியது இதனால் அப்பகுதி முழுவதும் சாக்கடையும் சகதியுமாக சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை ஏற்பட்டது.

இத்தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயர் மேரி பிரின்ஸி லதா அப்பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தம் பகுதியில் அமைந்துள்ள மழை நீர் வடிகால் ஓடையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,

எதனால்இந்தஅடைப்பு ஏற்பட்டது என கேட்டறிந்து மழைநீர் வடிகால் ஓடைகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்கவும், ஓடைகளில் குப்பைகளையும்,

வேண்டாத பொருட்களையும் போடுவதை தடுத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கவும், உடனடியாக அடைப்பை சரி செய்து மழை நீர் மற்றும் சாக்கடை கழிவுநீர் தடையின்றி செல்ல நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

உடன் மாநகர நல அலுவலர் டாக். சரோஜா , உதவி செயற் பொறியாளர் பிருந்தா, உதவி செயற் பொறியாளர் சந்தோஷ் குமார் மற்றும் சுகாதார அலுவலர் ராஜா, சுகாதார ஆய்வாளர்கள் தேன் மொழி, முத்து மணி , தொழில்நுட்ப உதவியாளர் நிஷ்மா மற்றும் மாநகர அதிகாரிகள், நாகர்கோவில் மாநகர திமுக செயலாளர் வழக்கறிஞர் ஆனந்த் 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் நவீன் குமார், ஆகியோர் உடனிருந்தனர்.

மேட்டுப்பாளையம் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினரிடம் வாழ்த்து பெற்ற சமூக ஆர்வலர் டி அறிவழகன்

கோவை மே 21

மேட்டுப்பாளையம் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் என் சுனில் ஆனந்த் நேரில் சந்தித்த அரசு பேருந்து நடத்துனர்/சமூக ஆர்வலர்/நோபல் உலக சாதனையாளர்/சைக்கிள் வீரர்,டி அறிவழகன் சமீபத்தில் பொதுமக்களிடையே சாலை விதிகளை கடைப்பிடித்து விபத்துக்களை தவிர்ப்போம் என்ற கருத்தை வலியுறுத்தியும் மேலும் புதிய உலக சாதனை சைக்கிள் பயணம் நிகழ்ச்சியை வெற்றிகரமாக மேற்கொண்டதை தொடர்ந்து, இவருக்கு வழங்கப்பட்ட நோபல் உலக சாதனை சான்றிதழ் உடன் சென்று வாழ்த்து பெற்றார்.

பின்னர் வருகின்ற ஜூன் மாதம் நிகழ்த்த உள்ள 6வது புதிய உலக சாதனை முயற்சியான (மேட்டுப்பாளையம் முதல் சென்னை வரையிலான சைக்கிள் பயணம் One Leg Pedaling With Carying 20. Kg weight) நிகழ்ச்சி வெற்றி பெற வேண்டுமென எம் எல்ஏ தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நீங்கெல்லாம் அதிகாரியா? திருச்சியில் துணை சபாநாயகர் கேள்வி

திருச்சி, மே. 21

துறையூர் அண்ணா பேருந்து நிலையம் புதுப்பிப்பு பணிகள் காரணமாக, 5 கிலோமீட்டர் தொலைவில் தற்காலிகபேருந்துநிலையம்செயல்பட்டுவருகிறது. இதனால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில், வெளியூர் செல்ல வந்த பெண் ஒருவர் கடும் வெயிலில் நீண்ட நேரம் நின்றதால் திடீரென மயங்கி விழுந்தார். துணை சபாநாயகர் ரவிசங்கர் சம்பவ இடத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். அங்கு பணிமனை அதிகாரி உதயகுமாரிடம் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் குறித்து சரமாரியாக கேள்விகளை எழுப்பினார்.

களியக்காவிளை அருகே

இசக்கி அம்மன் கோவிலில் 36 கிலோ வெண்கல விளக்கு திருடியவர் கைது

களியக்காவிளை, மே.21

களியக்காவிளை அருகே மேக்கோடு பகுதியில் அருள்மிகு இசக்கி அம்மன் திருக்கோயில் உள்ளது. இந்த திருக்கோயிலில் தினசரி காலை மாலை பூஜை நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் பூஜாரி கோயிலில் நேற்று முன்தினம் பூஜை முடிந்த பின்பு கதவை சாத்திவிட்டு சென்றுள்ளார். இந்நிலையில் நேற்று காலையில் சென்று பார்த்த போது கோயிலின் வெளிப்புறத்தில் இருந்த 36 1/2 கிலோ வெண்கல குத்துவிளக்கை திருடர்கள் திருடி சென்றுள்ளனர்.

இதுகுறித்து கோவில் தலைவர் குமார் சிங் களியக்காவிளை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் மேக்கோடு, பரம்பு வளாகம் பகுதியைச் சேர்ந்த ஆல்வின் (34) என்ற கொத்தனார் அந்த விளக்கை திருடி சென்றது தெரிய வந்தது.

இதை அடுத்து விளக்கை பறிமுல் செய்த போலீசார் ஆல்வினை கைது செய்தனர்.

குலசேகரத்தில்

கஞ்சா விற்ற 2 பேர் கைது 50 கிராம் கஞ்சா பறிமுதல்

நாகர்கோவில், மே.21

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட காவல் துறை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, குலசேகரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து குலசேகரம் போலீசார் அந்த பகுதியில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

இதில் தேங்கபாறை விளை பகுதியைச் சேர்ந்த அஜித் (27) மற்றும் புல்லுவிளை பகுதியைச் சேர்ந்த அபிஷேக் (26) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 50 கிராம் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதையடுத்து இருவர்மீதும் சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். மேலும் போதைப்பொருள் விற்பனைச் கும்பலுடன் இவர்களுக்கு தொப்பு உண்டா? எனவும் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சமீப காலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப்பொருள்பயன்பாடு மற்றும் விற்பனையை கட்டுப்படுத்த பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும், திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இளைஞர்களை குறிவைத்து நடைபெறும் போதைப்பொருள் விற்பனையை கட்டுப்படுத்துவதில் காவல்துறை கவனம் செலுத்தி வருகிறது.

போதைப்பொருள் விற்பனை அல்லது பயன்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், பொதுமக்கள் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகள் குறித்து போலீசாருக்கு தகவல் வழங்க வேண்டும் என்றும் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

விளவங்கோடு வட்டார பகுதிகளில்

ஒரே நாளில் 2 இடங்களில் 3000 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்

மார்த்தாண்டம், மே.21

கன்னியாகுமரி மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில், ஓட்டுனர் ஜாண் பிரைட் உள்ளிட்ட பறக்கும் படை குழுவினர் நேற்று 20ம் தேதி விளவங்கோடு வட்டார பகுதிகளில் பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு ரோந்து பணி நடைபெற்றது. அப்போது. சந்தேகத்திற்கு இடமாக காரோடு என்ற இடத்தில் வந்து கொண்டு இருந்த தமிழக பதிவெண் கொண்ட சொகுசு காரை நிறுத்தும் படி சைகைகாட்டினர். ஆனால்கார்நிற்க்காமல் அதி வேகமாக மாங்கோடு வழியாக பனச்சமூடு சென்று கேரள மாநிலம் ஒற்றசேகரமங்கலம், நெய்யாற்றின்கரை, விழிஞ்ஞம் வழியாக சுமார் 37 கிலோ மீட்டர் சென்றது. தொடர்ந்து கேரளாவில் உள்ள முக்காலா என்ற இடத்தில் வைத்து கடத்தல் காரை பிடித்தனர். அப்போது கடத்தல் காரை விட்டு இரண்டு கடத்தல் காரர்கள் தப்பி ஓடி விட்டனர்.

காரை சோதனை செய்ததில் அதில் சுமார் 2000 கிலோ பொது வினியோக திட்ட அரிசி கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் நேற்று மாங்கோடு பகுதியில் வைத்து தமிழக பதிவெண் கொண்ட மற்றொரு காரை சோதனை செய்ததில் அதில்சுமார்1000கிலோபொதுவினியோக திட்ட அரிசி கேரளாமாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த 3 ஆயிரம் கிலோ ரேஷன் அரிசியை காப்புக்காடு அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டு, கடத்தல் வாகனத்தை திருவட்டார் வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது.

நாட்றம்பள்ளி அருகே

இளம்பெண் காணாமல் போனதை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நடவடிக்கை எடுக்க கலெக்டரிடம் மனு

திருப்பத்தூர்:மே:21

திருப்பத்தூர் அடுத்தபாப்பானூர் மேடு பகுதியைச் சேர்ந்த தமிழரசு சித்ரா தம்பதியின் மகள் செல்வி கடந்த 23.12.2025 அன்று வெலக்கல் நத்தம் அடுத்த கிட்ட பையனூர் பகுதியில், வசித்து வரும் தனது அக்கா வீட்டிற்கு சென்றுள்ளார் அதன்பின் அங்கு எதிர்பாராத விதமாக காணாமல் போனதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் காணாமல் போன தன் மகளை கண்டு பிடித்து தருமாறு புகார் மனு அளித்துள்ளனர். அதன் பின்னர் பல முறை காவல் நிலையத்திற்கு சென்று தன் மகளை கண்டு பிடித்து தருமாறு தாய் தந்தை கோரியுள்ளனர். ஆனால் இதுவரையில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, மேலும் காவல் துறையினர் மெத்தன போக்காக செயல்பட்டு வருவதாக குற்ற சாட்டினை முன் வைக்கின்றனர்

மேலும், வாணியம்பாடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டபோது, உங்கள் மகள் “22 வயது ஆகிவிட்டதால் தனியாக சென்றிருக்கலாம்” என்ற அலட்சியமான பதில் கூறி வருவதாக குற்றசாட்டு முன் வைக்கின்றனர்.

அதேபோல், சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை பரிசோதிக்க கேட்டபோதும், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் காவல் உதவி ஆய்வாளர் மனோஜ் மற்றும் உதவி ஆய்வாளர் சீனிவாசன் ஆகியோர் அலட்சியமாக நடந்துகொண்டதாகவும், தன் மகளை விரைவில் கண்டுபிடித்து தர உத்திரவு பிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தரவல்லியிடம்கோரிக்கைமனுவை கண்ணீர் மல்க பெண்ணின் தாயார் சித்தரா வழங்கினார்.

அப்பகுதி மக்கள் மற்றும் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்று குற்றசாட்டினை முன்வைக்கின்றனர். காணாமல் போன இளம் பெண்ணை கண்டு பிடிக்க காவல் துறையினர் மெத்தன போக்காக செயல்படுவதை குறித்து அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்ட ஆட்சியரின் பார்வைக்கு கொண்டு சென்ற இந்த சம்பவம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பது பெற்றோரின் கண்ணீராக உள்ளது...?

குளச்சல் அருகே

14 பவுன் நகை, பணத்துடன் பெண் மாயம்; போலீசார் விசாரணை

குளச்சல், மே.21

குளச்சல் அருகே வாணியக்குடி பகுதியை சேர்ந்தவர் ததேயுஸ் மகள் அவந்திகா சினிமோள் (24). இவர் குளச்சலில் உள்ள ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வீட்டில் இருந்து வெளியே சென்ற அவந்திகா சினிமோள் பின்னர் வீட்டிற்கு திரும்பவில்லை. இதையடுத்து பெற்றோர் மகளை பல்வேறு இடங்களில் தேடினர். ஆனால் எங்கும் மகள் குறித்த எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையே அவந்திகா சினிமோளுக்கும், மணக்குடியை சேர்ந்த உறவினரான வாலிபர் ஒருவருக்கும் காதல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் இளம்பெண் அந்த வாலிபருடன் சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பெற்றோர் இருவரது செல்போன் எண்ணை தொடர்பு கொண்டனர். ஆனால் இவரது செல்போன்களும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் அவந்திகா பெற்றோர் வீட்டில் இருந்த நகை பணத்தை சரிபார்த்தனர்.

அப்போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த 14 பவுன் தங்க நகைகள், ரூ3.5லட்சம் போன்றவற்றை காணவில்லை. மாயமான மகள்தான் நகை பணத்தை எடுத்து சென்று இருப்பார் என்று கருதிய தாய் மேரி வசந்தாஇதுகுறித்துகுளச்சல்போலீசில் புகார் அளித்தார். போலீசார் மாயமான அவந்திகா சினிமோள் மற்றும் மணக்குடி வாலிபர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி மாநகராட்சி ஆணையர் அறிவிப்பு

திருச்சி, மே. 21

திருச்சி மாநகராட்சி ஆணையர் மதுபாலன் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், சமீபத்தியசட்டமன்ற தேர்தல்மற்றும்ஆட்சிமாற்றத்தால்திருச்சிமாநகராட்சியில் நடைபெற்று வரும் உள்கட்டமைப்பு மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் எந்தவித தொய்வும் ஏற்படாது என தெரிவித்துள்ளார். அனைத்து பணிகளும் குறிப்பிட்ட கால அட்டவணைப்படி நிறைவேற்றப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

நலத்திட்ட உதவிகள் ஆட்சியர் தகவல்

தேனி, மே. 21

தமிழ்நாட்டில் உள்ள சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த நபர்களின் சமூக, பொருளாதார, மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை (10ஆம் வகுப்பு முதல் ஐ.டி.ஐ பாலிடெக்னிக் படிப்பு மற்றும் தொழிற் கல்வி பட்ட படிப்பு), முதியோர் ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை, கண் கண்ணாடி உதவித்தொகை, விபத்து மரண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை, திருமண உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நேர்வில் 01.04.2026 முதல் சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் பரிந்துரை செய்தல் ஆகியவற்றை இணையவழி மூலம் நடைமுறைப்படுத்தும் பொருட்டு தமிழக மின் ஆளுமை முகமை மூலம் இணையவழி சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவேஇனிவரும்காலங்களில்18வயதுபூர்த்தியடைந்த 60 வயதிற்குட்பட்ட சீர்மரபினர் இனத்தை சார்ந்தவர்கள் நலவாரியத்தில் புதியதாக உறுப்பினராக பதிவு செய்வதற்கும், ஏற்கனவே பதிவு பெற்ற உறுப்பினர்கள் தங்களது பதிவினை புதுப்பிப்பதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும் https://www.dncwb.tn.gov.in/ என்ற இணையதளத்தில் சென்று தங்கள் கைப்பேசி எண் மூலம் உள்நுழைந்து உறுப்பினர் சேர்க்கை / நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் மனுதாரர்கள் இ சேவை மூலமாக இணையவழியில் விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

தனது அறையில் முதல்அமைச்சர் விஜய் படத்தை வைக்க பெண் மேயர் மறுப்பு

கோவையில் பரபரப்பு

கோவை, மே. 21

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத் துறை அலுவலகங்களிலும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் படத்தை வைப்பதற்கு, அதிகாரப்பூர்வமான புகைப்படம் ஒன்றை செய்தி மக்கள் தொடர்பு துறை தேர்வு செய்து வெளியிட்டுள்ளது. இந்தப் படம் பிரேம் செய்யப்பட்டு, அனைத்து அரசுத்துறை அலுவலகங்களிலும் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கோவை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கமிஷனர், துணை கமிஷனர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கூட்ட அரங்குகளில் முதல்அமைச்சர் விஜய் படம் மாட்டப்பட்டது. இதேபோல், மேயர், துணை மேயர், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் மண்டலக் குழு தலைவர்கள் அறையிலும் முதல்அமைச்சர் விஜய் படம் மாட்டப்பட வேண்டும். இவர்கள் அனைவரும் தி.மு.க.வை சேர்ந்தவர்கள் என்றாலும், இதில் துணை மேயர் வெற்றிச் செல்வன் தன் அறையில் முதல் அமைச்சர் புகைப்படத்தை வைப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், மேயர் ரங்கநாயகி, அவரது அறையில் முதல்அமைச்சர் விஜய் படத்தை வைப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். அதே நேரம், மேயர் அறைக்குள் முன்னாள் முதல்அமைச்சர்கள் கருணாநிதி, மு.க.ஸ்டாலின், முன்னாள் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, செந்தில்பாலாஜி ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மேயர் ரங்கநாயகி கூறும்போது, "எனக்கு ஒதுக்கிய அறையில் மாட்டப்பட்டுள்ள எங்கள் கட்சி தலைவர்கள் படங்களை எடுக்க முடியாது. அவர்களை பார்த்தால் புத்துணர்ச்சி கிடைக்கும். முதல்அமைச்சரின் புகைப்படத்தை அறைக்கு முன் வைத்திருக்கிறோம். 2027ம் ஆண்டு ஜனவரிமாதம்வரைஎனதுபதவிக்காலம்இருக்கிறது. அதுவரை என் அறைக்குள் முதல்அமைச்சர் விஜய்யின் படத்தை வைக்கமாட்டேன்" என்று தெரிவித்தார்.

இதேபோல், மண்டலக் குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் அறைகளிலும் முதல் அமைச்சர் விஜய்யின் புகைப்படத்தை வைக்க ஆட்சேபனை தெரிவித்ததால், கோவை மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் பேடறஅள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தில் மகளிர் திட்டம் மூலம் கோழி வளர்ப்பிற்காக வழங்கப்பட்டுள்ள அடைகாக்கும் சுருவியில் வைக்கப்பட்டுள்ள முட்டைகளை மாவட்ட ஆட்சியர் சதீஷ் பார்வையிட்டார். மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தசாமி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் எர்ரபையன அள்ளி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் MGNREGS 2025 2026 திட்டத்தின் கீழ் ரூ.9.20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் நாற்றுப்பண்ணை கூடத்தினை மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தசாமி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

நாகர்கோவிலில்

வங்கியில் அடகு வைக்க அழைத்து சென்று பெண்ணிடம் ரூ 11 லட்சம் மோசடி; 3 பெண்கள் மீது வழக்கு பதிவு

நாகர்கோவில்,மே. 21

நாகர்கோவில், கோட்டார் கீழராமன் புதூர் பகுதியை சேர்ந்தவர் பிராங்கிளின் (52) மீன்பிடி தொழிலாளி. அதே பகுதியை சேர்ந்தவர் கோபி. இரு குடும்பத்தாருக்கும் சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம் உள்ளது. பிராங்கிளின் தனது குடும்ப தேவைக்காக தங்க நகைகளை மனைவி சீதாவிடம் கொடுத்துஅடகுவைக்ககூறுவதுவழக்கம். சீதாவுக்கு சரிவர விவரங்கள் தெரியாததால் அவருக்கு உதவியாக கோபி மனைவி சுசிலாவை வங்கிக்கு உடன் அழைத்து செல்வது வழக்கம்.

இந்த நிலையில் சீதா அடகுவைத்த பணம் ரூ 11 லட்சத்தை வேறு வங்கி கணக்குக்கு மாற்றப்பட்டு இருந்தது. இது குறித்து சீதாவுக்கு எதுவும் தெரியவில்லை. இந்த நிலையில் கடந்த 25.10.2025 அன்று உடல் நலக்குறைவு காரணமாக சீதா மரணம் அடைந்தார். அவர் இறந்த பிறகு தான் சீதாவின் நகை அடகு வைத்து பெறப்பட்ட ரூ. 11 லட்சம் வேறு வங்கி கணக்கு மாற்றப்பட்டுள்ளது தெரிய வந்தது.

இது தொடர்பாக பிராங்கிளின் குடும்பத்தினர்விசாரித்தபோது, சீதாவுடன் வங்கிக்கு சென்ற கோபி மனைவி சுசீலா, அதே பகுதியை சேர்ந்த பிந்துஷா, இந்து ஆகியோர்சேர்ந்துதான்பணத்தைபிந்துஷா வங்கி கணக்கில் மாற்றியது தெரிய வந்தது. இது குறித்து அறிந்ததும் பிராங்கிளின் குடும்பத்தினர் சென்று பணத்தை கேட்ட போது ஏற்கனவே பணத்தை கொடுத்து விட்டதாககூறியுள்ளனர். இதுதொடர்பான எந்த ஆவணங்களும் இல்லாததால், இதையடுத்து பிராங்களின் தனது மனைவியை ஏமாற்றி சுசிலா 11 லட்சம் நம்பிக்கை மோசடி செய்துதிருடி விட்டதாக நேசமணி நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இந்த புகாரின் பேரில் நேசமணி நகர் போலீசார் தற்போது சுசீலா, பிந்துஷா, இந்து ஆகிய மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். விசாரணைக்கு பின் தான் இது தொடர்பானவிவரங்கள் தெரிய வரும் என போலீசார் கூறியுள்ளனர்.

“அதிமுக திமுக கூட்டணி முயற்சி நடந்திருக்க வாய்ப்பில்லை” செல்வப்பெருந்தகை தகவல்

சென்னை, மே. 21

“அதிமுக திமுக கூட்டணி குறித்து பத்திரிகைகளில் நான் சில செய்திகளைப் பார்த்தேன். அது போன்ற முயற்சி நடந்திருக்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது. அதுபோல நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்து” என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். சென்னை கிண்டியில் அயோத்திதாச பண்டிதர் மணிமண்டபத்தில் மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, “2023ல் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவையில் நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இங்கே அயோத்திதாசர் மணிமண்டபத்தை நிறுவினார். அவருக்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம். இந்த மணிமண்டபத்தை பேணிக் காக்க வேண்டும் என்பதே புதிய அரசுக்கான எங்களின் கோரிக்கை.

தவெக அரசில் எத்தனை காங்கிரஸார் அமைச்சராக பதவியேற்பார்கள் என விரைவில் அறிவிப்பு வரும். அதிமுகவிலிருந்து சிலர் தவெக அரசுக்கு ஆதரவு அளித்துள்ளனர். ஒருவேளை அதிமுகவினருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டால், அதுபற்றி கட்சிக்குள் ஆலோசிப்போம். அதுகுறித்து பரிசீலனை செய்வோம். அதிமுக திமுக கூட்டணி குறித்து பத்திரிகைகளில் தான் சில செய்திகளைப் பார்த்தேன். அதுபோன்ற முயற்சி நடந்திருக்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது. அதுபோல நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்து.” என்று தெரிவித்துள்ளார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.